# வேளை வந்தது

கணேசன் அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். குளிர்ந்த தண்ணீரை முகத்தில் வாரிக் கொட்டிக் கொண்டு சாரதா இப்பால் வந்தாள். செவேலென்று சிவந்து கிடந்த முகம் சற்று இதங்கொண்டது. அவசரமாய் ஒரு குங்குமப் பொட்டும் குத்திக்கொண்டாள். தீவிரம் உண்டானது போல் உலுப்பிக்கொண்டு அங்கு வந்து நின்றாள்.

"பணத்தைக் கொண்டு போகிறீர்களோ இல்லையோ? நன்றாக இருக்குமா, யோசித்துப் பார். மனசு கஷ்டப்படுவார்கள்" என்றான் கணேசன்.

"நான் மனசு துடிப்பது என்னவாம்? கஷ்டப்படட்டுமே அவர்கள் மனசும். அதை அனுப்பிவிடத்தான் வேண்டும். வேறே யோசனையே தேவையில்லை."

"அப்புறம் உன் இஷ்டம்."

கணேசன் பீரோவைத் திறந்தான். பத்து ரூபாயை எடுத்துக்கொண்டு போனான்.

ஒரு சொட்டுக் கண்ணீர் துளிர்த்தது. சாரதையின் கண்களில். சுண்டிவிட்டாள். இப்பொழுது ஒரே துளி ரத்தக் கண்ணீர் எனலாம். சற்று முன்பு? கணேசனுக்கே ஆச்சரியம். பிறத்தியார் பார்த்திருந்தால் என்னவோ ஏதோ என்று மிரண்டு போயிருப்பார்கள்; அப்படி அழுதுவிட்டாள். பிறருடைய பார்வையில் தன்னுடைய வீங்கிய வதனமும் இடுங்கின கண்களும் தென்பட வேண்டாம் என்று, கதவைத் தாழிட்டுக்கொண்டு, காரியங்களை முடித்துவிட்டுச் சாப்பிட்டாள். ஒரு தூக்கம் தூங்கி மனச்சுமை மறக்க வேண்டும் என்று தலையணையைப் போட்டுப் படுத்தாள். தூக்கம் எளிதில் வருகிறதாக இல்லை. நனைந்த செங்கல் போன்று சோர்வு கனத்தது உள்ளத்திலே.

அவர்கள் மனம் புண்படும் என்று தன் கணவனுக்கு இருக்கும். கனிவு தனக்கு இல்லாமற்போனதை நினைந்தபொழுது துக்கந்தான் வந்தது.

அவர்கள் யார்? அவளுடைய அம்மா, அப்பா. அவளுடைய பெற்றோர் வழக்கம்போல் அன்புடனே பிறந்த நாள் பரிசு அனுப்பியிருந்தார்கள். "உவந்த பொருள் வாங்கிக் கொள்" என்று எட்டுப் பத்து நாள் முன்னதாகவே அனுப்பிவிட்டார்கள். மிகவும் மகிழ்ச்சியுடன் அன்று அதைப் பெற்றுக்கொண்டவள்தான். ஐந்தாறு நாள் கழித்து, இப்பொழுது, "எனக்கு வேண்டாம்; திருப்பியடியுங்கள்" என்று வீம்பு செய்து சாதித்தாள்.

ஏன்?

காலையில் வந்த கடிதம் செய்த வினை. அவளுடைய தந்தையின் கடிதம்.

"மஞ்சுவின் கல்யாணத்தைப் பற்றி நீ ஏன் இப்படிக் கவலைப்படுகிறாய்? அவளுடைய படிப்பு இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது. உள்ளூரிலேயே ஒரு வேலை கிடைக்கும்போல வாய்ப்பு இருக்கிறது. அதையுந்தான் ஓர் ஆறேழு மாதம் பார்க்கட்டுமே! படித்த படிப்புக்கு ஒரு தன்னம்பிக்கை உண்டாகியிருக்கிறதோ பார்ப்போம்! அவளும் தயார்தான்! நீ என்ன சொல்கிறாய்? வேளை வந்தால் திருமணம் நடந்துவிடுகிறது. நீ அநாவசியமாய் அலட்டிக்கொள்ளாதே!"

இதுதான் அவளுடைய தந்தையின் கடிதம்; அவருடைய கருத்து. 'கடைசியில் அப்பா இப்படியா சொல்கிறார்!' என்று சாரதா திடுக்கிட்டுப் போனாள். பத்திரகாளியின் சிவந்த

நாவைப் போலத் தந்தையின் நா பயங்கரம் காட்டுகிறதாகப்பட்டது. காளியும் அன்னை; அன்னை பராசக்தியின் வேறு தோற்றம் என்பதை எளிதில் நம்ப முடிகிறதா?

சாரதாவுக்குத் தாங்கவில்லை. கடிதத்தைப் படிக்கும்பொழுதே குபுகுபுவென்று கண்ணீர் சுரந்து வந்தது. கணகணவென்று அக்கினி போல் முகம் சிவந்தது; பழுத்தது. விம்மலும் விசும்பலுமாக ஒரு பத்து நிமிஷம் அழுது ஓய்ந்தாள். "அவர்களுக்குத் தெரியாதா பொறுப்பு; இருக்காதா கவலை? நீ ஏன் சுமக்கிறாய்? அப்படித்தான் என்ன சொல்லிவிட்டார்கள்? இந்நாளில் எல்லார் மனப்போக்கும் மாறிவருகிறது. வெறுமனே இருப்பானேன், வேலை கிடைத்தால் போகட்டும் என்கிறார், வேறென்ன?" என்று கணேசன் சமாதானம் கூற முன் வந்தான்.

திணறிக்கொண்டு பதிலளித்தாள் சாரதை. 'நான் எழுதி வந்த அத்தனை கடிதங்களுக்கும் பலன் இதுதான் என்றால் எனக்குப் பொறுக்கவே மாட்டேனென்கிறது! கொஞ்சமாவது..." ஊஹுஂவென்று துக்கம் பிறிட்டு வந்தது. கேவிக்கேவி அழுதாள். தன்னுடைய ஆசை, யோசனை, உதவி, எதையுமே ஒரு பொருட்டாக ஏற்காமல் தந்தை அநீதி இழைத்துவிட்டார் என்ற எண்ணம் அரக்கு முத்திரையாகப் பதிந்து சுட்டது உள்ளத்தில்.

அவன் நினைத்ததென்ன? சொன்னதென்ன? நடப்பதென்ன?

மஞ்சு அவளுடைய தங்கை. தங்கைக்கு நல்ல கணவன் கிடைத்து அவள் சந்தோஷமாக வாழவேண்டும் என்பது மூன்று ஆண்டுகளாகவே அவளுடைய தீவிர ஆவல். சூடிக்கையான பையன்களைக் கண்டால், குலம் கோத்திரம் விசாரிக்கும் ஆர்வம், நல்லதொரு பொருள் கண்டால், "மஞ்சுவுக்கு வாங்கும்படி சொல்லவேண்டும்" என்று தோன்றும். அவளுடைய தாயும் தந்தையுங்கூட, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அப்படித்தான் சிரத்தையுடன் இருந்தார்கள். ஆனால் மஞ்சுவுக்கு ஒரு பிடிவாதம் போந்தது. "இன்னும் இரண்டு வருஷப் படிப்பும் முடிந்த பிறகு தான்" என்று கண் சிவந்தாள்; வெற்றி பெற்றாள்.

அந்த ஈராண்டு முடிந்து வருகையிலேயே, திருமண முயற்சியைத் தொடங்கும்படி சாரதை தன் பெற்றோருக்குத் தூண்டுதல் கொடுத்துக்கொண்டிருந்தாள்; அவளும் ஊக்கத்துடன் இயங்கினாள்; தூண்டில் கிடைக்கப்பெற்று, அதை மஞ்சுவின் ஜாதகத்துடன் பொருத்தம் பார்க்கச் செய்தாள். 'என்னே கடவுளின் திருவருள்!' என்று அவள் வியந்து மகிழும்படியாக ஜாதக பலன் கூறினார் ஜோதிடர். 'இவருக்கு இவள்; இவளுக்கு இவர்' என்று கூறும்படியாக இப்படி எப்படி ஜாதகம் கையில் கிடைத்தது என்று அவர் அதிசயித்தார். சாரதா அகமகிழ்ந்தவளாக உடனே பெற்றோருக்கு விவரம் தெரிவித்தாள். இந்த வரனுக்காகச் சுறுசுறுப்புடன் முயற்சியில் ஈடுபடும்படி அறிவித்தாள். ஆவலுடன் எதிர்பார்த்தாள் மறுமொழி. அப்பொழுதே ஏமாற்றம் உண்டாகிவிட்டது.

"இத்தனை உயர்த்தியான இடமாக இருக்கிறதே! எப்படியம்மா நாம் பேராசைப்படக்கூடும்? எப்படி அவர்களை நாம் அணுகுவது என்று யோசனையாக இருக்கிறதே! அவர்களுக்குத் தகுந்தபடி செய்ய நமக்குச் சக்தி வேண்டாமா? எந்தத் துணிவு கொண்டு நாம் சம்பந்திகள் ஆவோம் என்று கூறுவது? நீயே சொல்" என்று அம்மா எழுதினாள். அப்பாவோ, "அம்மாவே தயங்குகிறாள்" என்று எழுதிவிட்டார்!

"நம் பெண் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட வேண்டும் என்று நாம் விரும்புவது தவறாகுமோ? நண்பர்கள் மூலமாக ஜாதகம் கிடைத்திருக்கிறது. வெகு நேர்த்தியான பொருத்தம் என்று தெரியவருகிறது. ஆதலால் அடுத்தபடியாக, பெண் பார்க்க வரச்சொல்லுங்கள், அல்லது, போட்டோவை முதலில் அனுப்புவது உசிதம் என்றால்

அனுப்புங்கள். பெண்ணைப் படைத்த நாம் முழு மூச்சோடு, விடாமுயற்சியோடு, இங்கிதமாகச் செயலாற்ற வேண்டும். தாமதம் வேண்டாம். இந்த இடந்தான் மஞ்சுவுக்கு என்று நான் நம்பிவிட்டேன்" என்று சாரதா பெற்றோருக்கு ஓதினாள்.

"இந்த வரனின் பெற்றோர் பணவிஷயமாகப் பெருந்தன்மையாக இருப்பார்கள் என்று ஜாதகத்திலே ஓர் அம்சம் குறிப்பிடுகிறதாம். தயக்கம் வேண்டாம். பையனைப் பற்றியும் சிறப்பாகக் கேள்விப்படுகிறேன். மஞ்சு அதிருஷ்டசாலி. இறைவனின் திருவுள்ளம் இதழ் இதழாக மலர்ந்து வரும் அதிசயம் காண்போம்" என்று சாரதா, அன்றைக்கே அதே தபாலில் இரண்டாவதாக ஒரு கார்டு எழுதிப்போட்டு அவசரப்படுத்தினாள்.

ஆனால் அங்கே அவளுடைய பெற்றோர் அவசரப்படவில்லை. "முன்பின் பழக்கம் இல்லை. எப்படி நாம் அவர்களை நெருங்குவது என்று தயக்கமாகிறது. பெரிய இடம் இது. நாம் கேட்கப்போனால் 'அட, பேராசையைப் பார்! என்று யாரும் சொல்லக்கூடும். நம் சக்தி குறைவு. அவர்கள் பெருந்தன்மையாக இருந்து வாய் திறந்து கேட்காவிடினும், நாம் அவர்கள் அந்தஸ்துக்கேற்ப எடுப்பாகச் செய்யாவிட்டால் நன்றாக இருக்காதே! ஆழம் தெரியாமல் நாம் இறங்கப்படுமா? பெரிய இடத்துச் சம்பந்தம் நமக்குப் பெருமையாக இருக்கும். சின்ன இடத்துச் சம்பந்தம் அவர்களுக்குச் சிறுமையாக இருக்காதா?" என்று பல சந்தேகங்கள் அவர்களுக்கு.

"இதென்ன இப்படிப் பயப்படுகிறார்கள்! முயற்சி செய்யக்கூடாதா என்ன? நடக்கவில்லை என்றால் சரி, பிராப்தமில்லை என்று கொள்ளலாம். பணங்காசுதான் பிரதானம் என்று எல்லோருமே நினைத்துவிடுகிறார்களா? என்னவோ வீண்பயம் உன் பெற்றோருக்கு" என்று கணேசன்கூட அபிப்பிராயப்பட்டான்.

"ரொம்ப நல்ல சம்பந்தம் என்றால் கொஞ்சம் சிரமப்பட்டாகிலும் நடக்க வேண்டும் என்னும் ஆசை வேண்டும், அல்லவா?" என்று கணவனைக் கேட்டாள் சாரதா.

"ஆமாம்; நல்ல இடம் என்றால் கை நழுவிப் போகாமல் பார்க்க வேண்டியதுதான் நியாயம். ஆயிரம் இரண்டாயிரம் கடன் வாங்கினாலும் பாதகமில்லை. மெல்ல அடைத்துவிடலாம்" என்றான் கணேசன்.

"அதுகூடப் போதாது. இன்னும் அதிகமாகவே கடன் வாங்கவேண்டியிருக்கும். என்ன செய்வது? காலம் அப்படி இருக்கிறது. ஆனால், பெண்ணைப்பற்றிப் பொறுப்பு, கடமை, தீர்ந்தது என்ற நிம்மதிதானே? இனிமேல் பிள்ளைகள்தானே?" என்றாள் சாரதா.

"உம்" என்றான் கணேசன்.

அதையுந்தான் சாரதா எழுதியிருந்தாள் பெற்றோருக்கு. இத்தனை கடிதப் போக்குவரத்தும் நடந்து வந்தபோது, மஞ்சுவுக்குப் பரீட்சைகள் நெருங்கிவிட்டன. "மனம் ஒன்றுபட்டு இப்போது அவள் படிக்கட்டும். இந்த வரனை நாடுவோம்" என்று எழுதினார் அவளுடைய தந்தை. பரீட்சைகள் ஆன பிறகு, சாரதா சொற்படி, கணேசன் கொடுத்த விலாசத்துக்குக் கடிதம் எழுதவும் எழுதினார். அதற்கு மறுமொழி வரவில்லை எனவே ஒடுங்கிவிட்டார் அவர்.

அங்கே மஞ்சு மும்முரமாக ஒரு வேலையை இழுத்துப்போட்டுக்கொண்டாள். ஒரு பிரம்மாண்டமான புள்ளிக்கோலம் போடும் பணியில் ஈடுபட்டாள். சுமாரான பெரிய கோலம் போடத்தான் உத்தேசம் முதலில். அதைப் போட்டு முடித்தபிறகு உற்சாகம் வளர்ந்தது. புள்ளிகளைச் சேர்த்துக் கூட்டிக் கோலத்தை விஸ்தரித்துக்கொண்டு போனாள். விசாலமான இடம் பரந்து கிடந்தது, அங்கு.

"என்ன, கல்யாணக் கூடம் மாதிரி! வரவேண்டியதுதான் கல்யாணம்!" என விளித்தவாறு உள்ளே வந்தார் பட்டம்மாள். மஞ்சு புன்னகையுடன், "வாருங்கள் மாமி"

என்று வரவேற்றுவிட்டு, "அம்மா, மாமி!" என்று குரல் கொடுத்தாள். கமலம் வந்தாள். "ஒரு மணி நேரமாகப் போடுகிறாள், பாருங்கள்" என்று தெரிவித்தாள் பெருமிதத்துடன்.

"போடட்டும். இதெல்லாம் ஆசைக் காரியம். நானும் ஒரு காலத்தில் புள்ளிக்கோலம் தினுசு தினுசாய்ப் போடுவேன். இப்பொழுது வணங்கவில்லை. கோலக் குழாய்கள் வைத்திருக்கிறேன். நடத்தியாகிறது. ஆனால் ஒன்று; கோலம் சிறிதோ பெரிதோ, செம்மண் இட்டுவிட வேண்டும். அது ஒரு பித்து எனக்கு. எந்த ஊருக்கு மாற்றலாகிப் போனாலும் கையோடு ஒரு டப்பா செம்மண் வரும் என்னோடு. கோலப்பொடி கிடைக்காவிட்டால் மாப்பொடி போடலாம். செம்மண்ணுக்கு? இந்த ஊர்ச் செம்மண் காவிக் கட்டி மாதிரியல்லவா இருக்கிறது! சோபையே இல்லை."

மஞ்சு உடலை வளைத்துப் பட்டு மாமியை அண்ணாந்து பார்த்தாள். "அதுதான் பார்த்தேன்! அன்றைக்குச் செவ்வாய்கிழமை சினிமாவுக்குப் போனோமே! நீங்கள் சுவாமியண்டை போட்டிருந்த கோலமும் செம்மண்ணும் எத்தனை அழகாக இருந்தன!" என்றாள்.

"உனக்கு ஆசையாக இருந்தால் ஓர் உருண்டை செம்மண் தருகிறேனே! ஒரே கட்டிதான்! அதற்குமேல் இல்லை!"

"ஓ, போதுமே! ஆசைக்கு எப்போதாவது பூசலாம். கோலம் பளிச்சென்று இருக்குமே!"

பட்டம்மாள் உப்புமாவுக்கு அரிசி உடைத்துக்கொண்டு போக வந்திருந்தார். போகும்பொழுது, மஞ்சு முடித்திருந்த கோலத்தைப் பார்த்தார்; மெச்சினார். "இதற்குச் செம்மண் இட்டாயோ நான் கொடுப்பதில் பாதி தீர்ந்து போகும்!" என்று சிரித்தார்.

"இல்லை இல்லை, இதற்குப் பூசவேண்டியதில்லையே!" என்றாள் மஞ்சு. பட்டுமாமியுடன் சென்று செம்மண் கொண்டுவந்துவிட்டாள்.

"நாளைக்கு வெள்ளிக்கிழமை. நல்ல கோலம் போட்டுச் செம்மண் இடு!" என்றாள் கமலம்.

"அக்காவுக்கும் பிறந்த நாள் நாளைக்கு" என்றாள் மஞ்சு.

"நல்லதாயிற்று. உம், என்ன வாங்கிக்கொண்டாளோ என்னவோ. எவர்சில்வர் சம்புடம் வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாள். கிடைத்தால் அதை வாங்கிக் கொள்வாள் என்று நினைக்கிறேன்."

"அங்கே ஏதம்மா நல்ல தினுசு? வெளியில் சின்னப் பூஜை மணி வாங்குவாள்; பத்து ரூபாய்க்குக் கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தாள். பரிசு 'ரேட்' தான் தெரியுமே அவளுக்கு?"

"சரி. ஏதோ வாங்கிக் கொள்ளட்டுமே. அவள் கல்யாணம் நடந்தபோது எத்தனையோ வாங்க முடியாமல் போய்விட்டது. இல்லாததைப் பார்த்து வாங்கிக்கொள்வாள். அப்பப்பா, ஒவ்வொரு வஸ்துவும் என்ன விலை விற்கிறது! இன்னொரு கல்யாணம் நடக்கவேணும். எப்படி ஆகப்போகிறதோ தெரியவில்லை. அவளுக்கு என்னவோ பாவம் தன் தலைப் பொறுப்பு மாதிரி ஒரு விசாரம்."

மெல்லத் தன் போக்கில் பேசிக்கொண்டு நகர்ந்தாள் கமலம். மஞ்சு அன்னையை உணர்ந்துகொண்டாள். புன்னகை பூக்க இயலாமல் சிந்தித்து நின்றாள்.

மறுநாள் அதிகாலை, வாசலில் அழகிய கோலம் போட்டு, அதற்கு எடுப்பான செம்மண் வரம்பு இட்டுவிட்டு, வைத்த கண் வாங்காமல் நன்றாகப் பார்த்துச்

சந்தோஷப்பட்டுக்கொண்டு, சிவந்த கையும் சிரித்த முகமுமாக உள்ளே திரும்பிக்கொண்டிருந்தாள் மஞ்சு.

வாசலில் வண்டிச் சத்தம்; ஒரு சுமங்கலிப் பெண்மணி வண்டியிலிருந்து இறங்குகிறார். யார்? விளங்கவில்லை. வரவேற்க வேண்டாமா? திரும்பினாள், வாசலை நோக்கி. அப்பொழுது அங்கு ஒரு வாலிபனும் நின்றிருக்கக் கண்டாள். தயங்கி உள்ளடங்கி நின்றுவிட்டாள். இளைஞனின் கவனம் இங்கில்லை. "அதோ, அங்கு நிற்கிறார் போலிருக்கிறதே பட்டுமாமி? இந்த வீடு இல்லை; செம்மண் அடையாளம் நன்றாகச் சொன்னார்கள்! இரும்புக்கிராதிக் கதவு இங்கே இல்லை. உம். நட."

"ஆமாம், அதோ பட்டம்மாள்தான்! போவோம்!" என்று நடந்து விரைந்தார் அந்தச் சுமங்கலி. மஞ்சு விஷயத்தை ஒருவாறு புரிந்துகொண்டாள். "அட பாவமே" என்று அவள் நினைக்கயிலே, அந்த வாலிபன், "நல்ல வேடிக்கை!" என்று கருதும் பாவனையில் உதட்டைப் பிதுக்கி மடித்துக் கோணங்கி பண்ணியவாறே, அழகிய முகத்தை அழகற்றதாக்கிக்கொண்டு, இந்த வீட்டை ஒரு பார்வை உற்றுப் பார்த்தான். மஞ்சு நிற்கிறாள்! மறுவிநாடி சரசரவென்று நடந்து போய்விட்டான்; வண்டிக்காரனைத் துரிதப்படுத்தும் அவசரம் போலக் காட்டிக்கொண்டான்!

அந்த இளைஞன் பார்த்த ஊன்றிய பார்வையில் நிலை தடுமாறி மஞ்சு வாசற்படியின் உள் பக்கம் காலை இழுத்துக்கொண்டாள். அது ஏதோ இடறியும் விட்டது. கையில் இருந்த செம்மண் கிண்ணம் ஆடியது. திடலாகச் செம்மண் குழம்பு புடைவையில் விழுந்து கறை படர்ந்தது. அதைப்பற்றி வருந்தாமல் இளநகை பூத்தாள் மஞ்சு.

அன்று நண்பகல் பட்டம்மாள், தம் விருந்தாளிப் பெண்மணியுடன் வந்தார். அப்பொழுதுதான் சுடச்சுட மைசூர்பாகு கிளறிக் கொட்டி வில்லை போட்டுக்கொண்டிருந்த கமலம், "இதைச் சாப்பிடுங்கள், சூடு ஒரு ருசி, சிவப்பு ஓர் அழகு என்று சொல்லுவார்கள்" என்று உபசரித்துப் பட்சணம் கொடுத்தாள்.

"வாஸ்தவமாகவே மைசூர்பாகு சூடாகத்தான் பிடிக்கும் எனக்கு. ஆறின பிறகு தின்னத் தோன்றாது" என்று புன்னகை பூத்தார் அந்த மாது.

"சிவப்பு ஓர் அழகு என்பதும் வாஸ்தவம். சிவப்புத் தோல் எத்தனையோ குறைகளை மறைத்துவிடும். என்ன, சொர்ணம்? உங்களுக்கு நாட்டுப் பெண் எப்படி வேணும் என்று ஆசை? லட்சணமில்லாவிட்டாலும் சிவப்பாகவோ வெளுப்பாகவோ இருந்துவிட்டால் போதுமா? கறுப்பானாலும் லட்சணமாக இருக்க வேணுமா?" என்று பட்டம்மாள் தமக்கே உரிய வெண்கலக் குரலில் விமரிசையாகப் பேச்சுத் தொடங்கினார்.

சொர்ணம் வெறுமனே முறுவல் பூத்தார். "என்ன, ஒரே அழுத்தம்! சொல்லக்கூடாதாக்கும்!"

"சொல்கிறதற்கு என்ன? மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்! மூன்று தினுசாக வருவார்கள்! நம் எண்ணம். யத்தனம் எப்படி இருந்தாலும் பிராப்தம் என்பது ஒன்று இல்லையா?" என்று சொர்ணம் நிதானத்துடன் பதிலளித்தார்.

"மாமி, நீங்கள் சாப்பிடுங்கள். இதோ வந்துவிட்டேன், மஞ்சுவுக்குக் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்று கமலம் ஒரு வில்லை மைசூர்ப்பாகு எடுத்துக்கொண்டு எழுந்தாள்.

"இதற்கு நீங்கள் எழுந்து போகவேணுமா என்ன? இங்கு வருகிறாள் அவள்தான்! அவள் படிக்கும்போது, பரீட்சைக்கு வாசிக்கும்பொழுது, மேஜையண்டை கொண்டு கொடுத்தே பழக்கம்! அப்படித்தானே!" என்று பட்டம்மாள் சிரித்தார்.

"சரியாகத்தான் சொல்கிறீர்கள்!" என்று கமலமும் ஒப்புக்கொண்டு பெண்ணைக் கூப்பிட்டாள்.

மஞ்சு வந்துகொண்டிருந்தாள். பெரியவர்கள் பேச்சுத் தன் திருமண விஷயமாக எழக்கூடும் என்று கூசி அவர்களுக்கிடையில் வந்து உட்காராமல் தயங்கி இருந்தவள், அன்னை அழைத்ததும் வந்தாள்.

"இன்றைக்கு என்ன விசேஷம்? மைசூர்ப்பாகு?" என்று பட்டம்மாள் கேட்க, "சாரதாவுக்குப் பிறந்த நாள்" என்று கமலம் தெரிவித்தாள். "அவள் அங்கே ஒன்றும் செய்துகொள்ளமாட்டாள். இங்கு நானாவது ஒரு தித்திப்புப் பண்ணினால் எனக்கு ஒரு திருப்தி" என்று சொல்லிக்கொண்டாள், மஞ்சுவின் கையில் மைசூர்ப்பாகு வில்லையை வைத்தபடி.

"இவள் சின்னப்பெண்ணாக்கும்! கல்யாணம் ஆகவேணுமோ இனிமேல்தான்!"

"பட்டம் வாங்கவேண்டிய படிப்புப் படித்தாயிற்று. வேலைக்கு வேணுமானாலும் போகலாம்" என்றார் பட்டம்மாள்.

"படிப்பு இப்போது தான் முடிந்தது. வரன் பார்க்கவும் சிரத்தை இப்போதுதான் வந்திருக்கிறது" என்றாள் கமலம்.

"சாரதா இன்னும் எழுதிக்கொண்டுதானே இருக்கிறாள். முன்மாதிரி?" என்று விசாரித்தார் பட்டம்மாள்.

"உம், எழுதுகிறாள் அலுக்காமல் சலிக்காமல், நாங்கள் அசிரத்தை செய்கிறதாக அவள் எண்ணம். அசிரத்தையாக இருக்க முடியுமா? இந்த நாளில் கல்யாணம் நிறக்கச் செய்ய வேண்டுமென்றால் எத்தனை பணம் இருந்தால் போதும்? அவள் சொல்கிற இடம் பெரிய இடம். சட்டென்று நாம் எப்படிக் கேட்பது என்று இராப் பகல் யோசனை எங்களுக்கு, அவளுக்கு அது தெரியமாட்டேனென்கிறது."

"ஆமாம், வாஸ்தவம். ஒரு கல்யாணம் செய்ய, சாதாரணமாகச் செய்ய, ஆறாயிரம் போதாதே!" என்றார் பட்டம்மாள்.

"ஆறாயிரம் எதற்காச்சு? வைரத்தோடு ஒன்றே ஆயிரத்தைந்நூறு ஆகிறதே! எட்டாயிரம் சுமார்" என்றாள் கமலம்.

"இனிமேல்தான் எல்லாம் வாங்கவேண்டும் என்றால் கஷ்டந்தான். தோடு திருகாணி முதற்கொண்டு கல்யாணச் சமயத்தில் வாங்கினால் போகிறது என்று இருக்காமல் சில பேர் முன்கூட்டியே ஒவ்வொன்றாக வாங்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அத்தனை சிரமம் இராது. நீங்கள் அப்படிச் செய்யவில்லையாக்கும்." சொர்ணம் மஞ்சுவை ஆராய்கிற மாதிரி நோக்கினார். மஞ்சு ஒரு தணிந்த பார்வை பார்த்துவிட்டு மெல்லப் பின் வாங்கினாள்.

"என்னவோ அம்மா, அத்தனை பணங்கொட்டிச் சீர் செய்தாலும், அத்தனை வெள்ளிப் பாத்திரமும் நகை நட்டும் பெட்டியில் சொஸ்தமாகத் தூங்க வேண்டியிருக்கின்றன! டில்லியும் பம்பாயும் அஸ்ஸாமும் போகிற சிறிசுகள் எதையுமே கொண்டு போக முடிகிறதில்லை. வைரத் தோடு கூடக் காதோடு கிடக்க முடியாமல் அப்படி ஒரு காலம். சீர் செய்தார்கள் என்ற மட்டோடு சரி. பிறந்தகத்திலேயோ, புக்ககத்திலேயோ பெட்டியோடு இருக்கவேண்டியதுதான். அத்தனையும் வீண்" என்று பட்டம்மாள் விரும்பத்தக்க கருத்து ஒன்றை வெளியிட்டார்.

கமலம் விரும்பக்கூடிய பேச்சு! சொர்ணம்?

"வீண் என்ன? அவர்களுடைய உடைமை, உரிமை, அவை எங்கே இருந்தாலும்! வாங்காவிட்டால் நன்றாக இருக்குமா? ஒரு பிரகிருதத்தில் வாங்கிக் கொடுக்காவிட்டால் எப்போது செய்கிறது?" என்று கமலம்தான் கேட்கிறாள்! சொர்ணாம்பாளையும் 'சரிதானே?' என்று கேட்கிற பாவனையில் பார்த்தாள்.

பட்டம்மாள் மிடுக்காக முறுவல் பூத்தார். "பேஷாகச் செய்யத்தான் வேண்டும்; இல்லை என்கிறேனா? அநியாய விலை போட்டு வாங்கும்படியாகிறதே என்று பேச்சு வரக்கொண்டு சொன்னேன். அப்படித்தான் அகவிலையில் வாங்கியும் சிறிசுகள் அநுபவிக்க முடிகிறதா என்பதற்குச் சொன்னேனம்மா. வேறென்ன? சீர் செய்நேர்த்தி எல்லாம் செய்ய வேண்டியபடி செய்தால் கசக்குமா? சபை நிறைய, வீடு நிறைய, மனசு நிறைய எல்லாம் செய்வதுதான் லட்சணம். சந்தேகமென்ன?" என்று படபடப்புடன் மொழிந்தார்.

"நம் கைநிறைய, பை நிறைய ஒரு பெரிய வஸ்து முதலில் வேணும்" என்று கமலம் சிரித்தாள் சற்றே தளர்வாக.

சொர்ணாம்பாள் பேச முற்படவில்லை. கவனித்தார். "என்ன யோசனை சொர்ணம்? உங்களுக்கு என்ன கவலை? சீர் கொள்ளத்தான் யோகம் உங்களுக்கு. பெண்ணுக்குச் சீர் எடுக்கிற சிரமம் கிடையாது" என்று வாயைக் கிளற முயன்றார் பட்டம்மாள்.

"சிரமமென்ன? பெண்ணுக்குச் சீர் எடுக்க ஆசையாகத்தான் இருக்கும். மஞ்சுவுக்கு அதை வாங்கமாட்டோமா இதை வாங்க மாட்டோமா என்று எனக்கும் ஆசையில் குறைவா என்ன? அடுத்தாற்போல படிக்க வேண்டிய பையன்களை உத்தேசித்து ஆசையை இழுத்துப் பிடிக்க வேண்டியிருக்கிறது. நம் கடமை அவர்கள் விஷயத்திலும் இருக்கிறது நிறைய, இல்லையா?" என்றாள் கமலம்.

"ஆமாமாம், அவரவர் குழந்தைகளுக்குச் செய்ய ஆசை இருக்காதா பின்னே?" என்று ஆமோதித்தார் சொர்ணம்.

"அவரவர் பெண்களுக்கு என்று சொல்லுங்கள்!" என்று பட்டம்மாள் சிரித்தார்.

"பெண், பிள்ளை, எல்லாருக்குந்தான்!" என்று குரலை அழுத்திச் சொன்னார் சொர்ணம், சிரிக்காமலே. "எனக்குப் பெண் இல்லை. நான் செய்வதெல்லாம், செய்ய இருப்பதெல்லாம் பிள்ளைகளுக்குத்தான்; நாட்டுப் பெண்களுக்குத்தான்" என்ற பொருள் புலப்பட்டது பார்வையில்.

"சாரதா இருக்கிறாளே; அவள் சுபாவம் எப்படி என்று பட்டுமாமிக்குத் தெரியும். மஞ்சுவுக்குக் கல்யாணம் பண்ணிவிடுங்கள். பணம் புரட்டிச் செய்துவிடுங்கள் என்று எத்தனை சொல்கிறாள்? ஆனால் அவள் அநாவசியமாக எங்களிடம் எதையும் பெற்றுக் கொள்கிறதில்லை. தம்பிகளுடையதைப் பிடுங்கிக்கொள்கிற மாதிரி இருக்கிறது என்பாள். தீபாவளி, நவராத்திரி, பிறந்த நாள் இவற்றுக்கு மட்டும் வேண்டாம் என்று சொல்லக் கூடாது என்று கோபித்தோம். மறுக்கிறதில்லை. ரொம்பக் கணக்கு, கண்டிப்பு அவள் சுபாவம்" என்று கமலம் பேச்சு மாற்றினாள்.

"நல்லதுதான்" என்றார் சொர்ணம்.

"யாரும் யாரிடமும் கொடுக்கல் வாங்கலில் ஒரு வரம்புக்குள் இருப்பதுதான் அம்மா நன்மை" என்றாள் பட்டம்மாள்.

"அப்படித்தான் இருப்பாள் சாரதா. தன் புக்ககத்தார் ஒரு பொல்லாப்புச் சொல்லிவிடக் கூடாது என்பதும் குறி. தன் தம்பிகள், தங்கை என்று ஓர் ஆசைப் பண்டம் கொடுப்பதில்கூட யோசனையும் ஜாக்கிரதையும் உண்டு. அநாவசியமாகக் கொடுக்கமாட்டாள்; பெற்றுக்கொள்ளமாட்டாள். ஐந்து பத்துக்கு ஆனாலும் இப்படி ஒரு

கணக்குப் பார்ப்பது அழகா என்று கூடத் தோன்றும்!" என்று கமலம் பெருமையாகவே தெரிவித்துக் கொண்டாள்.

"கணக்காக இருந்தால் வம்பு இல்லை" என்று பட்டம்மாள் சுருக்கமாகப் பேசிவிட்டார். ஆனால்?

சொர்ணம் சொல்கிறார் சுவையான செய்தி: "பணங்காசுதான் என்னவெல்லாமோ செய்கிறதே! எனக்குத் தெரிந்த அம்மாள் ஒருவர் இருக்கிறார், பாவம்! கேட்டுக் கேட்டுச் சீரும் வரிசையும் கொள்ளையாய் வாங்கினார் பிள்ளைக்கு. வீடு நிறைய நாட்டுப்பெண் கொண்டு வந்த சாமான்கள் நிறைந்து போயின. கொஞ்ச நாளைக்குள் சந்தோஷமெல்லாம் வடிந்துவிட்டது. 'வீடு முழுவதும் அவள் சாமான்கள்; எனக்கு என் பிள்ளையின் வீடு என்ற எண்ணமே வரமாட்டேன் என்கிறது. நாட்டுப்பெண்ணின் வீடு என்ற எண்ணந்தான் வருகிறது. ஏன் இத்தனையும் கேட்டு வாங்கினோம் என்று இப்போது வருத்தமாக இருக்கிறது!' என்கிறாள். அத்தனை சீரும் பொருளும் வந்தும் எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கிறதாம்! பாவம்!"

"எதையோ என்ன? பிள்ளை என்ற ஆசையைத்தான்! வரதட்சிணையாக, பணமாக, வாங்கினால் நாமே அடிமைப்பட்ட மாதிரியாகிவிடுவோம்! வரதட்சிணை வாங்காமல் எல்லாம் பாத்திரமும் பண்டமுமாக வாங்கினால் பிள்ளைக்கு அந்தக் கதி. நாம் வாங்கிக் கொடுத்தது என்று நம் பிள்ளையிடம் என்ன இருக்கிறது? அவனுடைய பூணூலுக்கு வாங்கின பஞ்சபாத்திரம், உத்தரணி, அவன் என் கையால் சாப்பிட்ட சாப்பாட்டுத் தட்டு முதற்கொண்டு எல்லாம் இங்கேயே இருக்கின்றன. நம் பையன், நாட்டுப்பெண்ணின் அகமுடையானாகத்தான் இருப்பான்; இருக்க வேண்டியிருக்கிறது!" என்று பொரிந்தாள் பட்டம்மாள்.

"அவற்றைக் கொடுத்துவிடுங்கள் பிள்ளைக்கு!" என்று சிரித்தார் சொர்ணம்.

"அதைக் கொடுத்தால் போதுமா? பெண்ணுக்குச் சீர் செய்கிற வழக்கம் போய், பிள்ளைக்குச் சீர் எடுக்கிற வழக்கம் வந்தால், பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் நமக்கு அடங்கியிருப்பார்கள் என்று தோன்றுகிறது. ஒரு மாதம் கல்கத்தாவில் பிள்ளையிடம் இருந்தேனே; நிஜமாகவே எனக்கு அப்படித்தான் இருந்தது, இருப்பாக இல்லை அங்கு" என்று பட்டம்மாள் அசட்டுச் சிரிப்புடன் வெளியிட்டார்.

"எனக்கு என்ன கவலை என்று சொன்னீர்களே? நான்தான் மிகவும் கவலைப்பட வேண்டியவள் என்று தெரிகிறதோ இல்லையோ?" என்று கேட்டார் கேள்வி சொர்ணாம்பாள்.

"மிகவும் வாஸ்தவம். ஆனால் நீங்கள் மட்டும் இஷ்டப்பட்டால் திண்டாட்டம் என்னத்திற்கு வருகிறது! நாட்டுப்பெண் கொண்டு வந்துதான் வீடு நிறைய வேணுமா என்ன உங்களுக்கு? உங்கள் விஷயம் வேறு. நீங்கள் செய்வது, வைத்திருப்பது எல்லாமே பிள்ளைகளுக்குத்தான்; எங்களுக்கு அப்படி இல்லையே. ரொம்பத் திண்டாடத்தான் வேண்டும்."

"அதென்னவோ, எதுவும் ஓர் எல்லைக்குள் இருந்தால் கஷ்டமே இல்லை, அம்மா. தன்னுடையது என்று ஏதோ சீரும் சிறப்புமாக வந்தால் அந்தப் பெண்ணுக்கு ஒரு பலம் இல்லையா? பெருமை இல்லையா? ஏழைக் கோலத்தில் போனால் அவன் பாடு திண்டாட்டம்!" என்றாள் கமலம்.

"கொண்டாட்டம் எல்லாம் கொஞ்ச நாளைக்கு; அப்புறம் எல்லாம் அவரவர் பாடு, சம்சாரம் என்று எல்லாம் சகஜமாகப் போய் மனசு ஒட்டிவிடும்!" என்று பட்டம்மாள் அழகாக முத்தாய்ப்பு வைத்தார்.

"ஒட்டிவிடும் என்றால் அதற்குப் பசை அபிமானந்தான்; அறிவுதான். காசு இல்லை. அப்படித்தானே?" சொர்ணம் கேட்ட இந்த வினா, அந்தப் பெண்கள் மூவரையுமே இன்பப் புன்னகை பூக்கச் செய்தது.

"இத்தனை பேச்சும் என் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை ஊட்டிவிட்டது" என்பதை வெளியிட வேண்டும்போலக் கமலத்திற்கு ஓர் ஆறுதல் உண்டாயிற்று. வாய் திறந்து சொல்லவில்லை.

பெண்களின் உரையாடலிலே விஷயம் ஒன்றாகவே இருக்குமா? அதன் கருத்துக்கு எல்லை உண்டா? வண்ணக் கோலத்திற்குச் செம்மண் வரம்பு பொருந்துமா? அப்புறம் வேறு விஷயங்களும் பேசினார்கள். நேரம் போனதே தெரியவில்லை. பட்டு மாமியின் பெண் கூப்பிட வந்துவிட்டாள். "சேகர் மாமாவுக்கு இந்த வாரத்து 'வானவில்' வேணுமாம்; கேட்டார். இந்த அகத்திலிருந்து கொண்டு வருகிறேன் என்றேன். இருக்கிறதா?" என்று கேட்டுப் பத்திரிக்கையைப் பெற்றுக்கொண்டாள்.

"நேற்று ராத்திரி கண்மூடாமல் படித்தானே, அது வேறு பத்திரிகை போலிருக்கிறது. நல்ல வெறி. நான் நன்றாகத் தூங்கினேன் ரெயிலில், மெனக்கெட இரண்டாம் வகுப்பு ரிஸர்வ் பண்ணிவிட்டுத் தூங்காமல் வந்தான்" என்று சொர்ணம் சிரித்துக்கொண்டு சொல்லிப் போனார்.

சேகர் என்னும் பெயர் மஞ்சுவின் நெஞ்சில் இனித்தது. கமலம் அதைப்பற்றிக் கவனிக்கவில்லை. மாப்பிள்ளையாக வரக்கூடும் என்று ஜாதக பலன் குறிப்பிடும் வரனைப்பற்றியே முயற்சி இல்லையாம். சாரதா நொந்து கிடக்கிறாள். வேறு எதைப் பற்றிச் சிந்தனை செய்ய?

சாயங்காலம் சபேசன் வந்ததும் கமலம் மைசூர்பாகு கொடுத்தாள். "சுடச்சுட உங்களுக்குத்தான் தர முடியவில்லை. எதுவுமே உங்களுக்குச் சூடு பிடிக்காதே என்ற எண்ணம்; மத்தியான்னமே பண்ணிவிட்டேன். நான் கூடப் பேசிக்கொண்டே வாயில் போட்டுக்கொண்டேன். கோயிலுக்குப் போய் வரலாமென்றிருக்கிறேன். சாரதா பேரில் அர்ச்சனை செய்ய முடியுமா பார்க்கிறேன். மூன்று வருஷமாய் இந்த ஊரில் இருக்கிறோம். யார் பெயரிலும் அர்ச்சனை பண்ணினதில்லை. நம்மூர் என்றால் தோன்றியிருக்கும்" என்று கமலம் பல பேசினாள்.

சபேசன் பட்டென்று வாய்திறந்தார். "சுடச்சுடக் கிடைக்காமலென்ன எனக்கு?" என்று மணியார்டர் வந்த ஓலை நறுக்கைக் காட்டினார்.

விவரம் விளங்கிய பிறகு கமலம் கணநேரம் விக்கித்துப் போனாள். "ஏன்? அப்படி என்ன குற்றம் செய்துவிட்டோம்? ஏன் இப்படிப்பட்ட தண்டனை?" என்று வெலவெலத்துவிட்டாள்.

"சாரதாவின் மனநிலையைப் பார்த்த எனக்கு அவள் சொற்படி நடவாமலிருக்க முடியவில்லை. வருத்தத்துடன் திருப்பி அனுப்புகிறேன். சஞ்சலப்படப வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கணேசன் எழுதியிருந்தான்.

"இப்படிக் கோபித்துக்கொண்டால் சரிப்படுமா என்ன? அவள் யோசனைப்படி கடிதம் போட்டோம்; பதிலே வரவில்லையே! அப்புறம்?" என்று சபேசன் சமாதானம் தேட முயன்றார்.

"அடேயப்பா! எத்தனை கோபம்?" என்று மஞ்சுவுக்கு முகத்தில் முறுவல் அரும்பிவிடும் போல இருந்தது, அருமை அக்காளை எண்ணி!

"அர்ச்சனை பண்ணலாம் என்று எனக்கு இன்று அதிசயமாகத் தோன்றிற்றே, இந்த ஊரில்! இதற்குத்தானா அவளுக்கு இதுதான் இந்த வருஷத்துப் பிறந்த நாள் பரிசு

போலும்! அப்படியே இருக்கட்டும்" என்று கமலம் நினைத்தாள். மஞ்சுவை அழைத்துக்கொண்டு கோவிலுக்குப் போகத் தேங்காய் பழம் எடுத்து வைத்துத் தயாரானாள்.

"மாமி, அம்மா ஓர் எலுமிச்சம்பழம் கேட்டாள்" என்று வந்தாள், பட்டு மாமியின் பன்னிரண்டு வயசுப் பெண்.

"ஒன்று போதுமா? ரசத்துக்குப் பிழியவா?"

"இல்லை மாமி, சேகர் மாமா காபி வேண்டாம் என்று சொல்லிவிட்டார். இரண்டாம் வேளை காபி பிடிக்காதாம். அவருக்கு ஷர்பத் கரைக்க."

"இரண்டாம் வேளை என்பது இப்பொழுதா? ஏன், ஷர்பத்து வெயில் நேரத்தில் குடித்திருக்கப்படாதோ?"

"வானவில் படித்துக் கொண்டே தூங்கிவிட்டார்."

"அப்போது சரி; நாங்கள் கோயிலுக்குப் போகிறோம். அம்மாவும் மாமியுங்கூட வருவார்களோ?"

வாசலில் பேச்சுக் குரல் கேட்டது. சேகரும் பட்டம்மாளின் கணவரும் வந்திருந்தார்கள். "இங்கேயே ஷர்பத் குடிக்கட்டும்; பேசவும் வந்த மாதிரி ஆயிற்று என்று அழைத்து வந்திருக்கிறேன்!" என்று சபேசனிடம் சொல்லிக் கொண்டிருந்தார் பெரியவர். தமக்கு வேண்டாம், தொண்டைக் கட்டு என்றார். அதனால் சேகருக்கு மட்டும் ஷர்பத்து அளித்துவிட்டு, மைசூர்ப்பாகு வில்லைகளையும் கொடுத்துவிட்டு, தாயும் மகளும் கோவிலுக்குப் புறப்பட்டுப் போனார்கள். மஞ்சு சேகர் இருவருமே, கணப்பொழுது, கண்கொட்டாமல் பார்வை ஊன்றிப் பார்த்த நேர்த்தியை என்னவென்பது!

கமலம் கோயிலில் அம்மன் சந்நிதியில் உருக்கமாக நின்றாள். சாரதையின் மனக்குறைகள் நீங்கும் வகையில் தங்களுடைய முயற்சிகள் இனிதே உருப்பெற வேண்டுமென்று வேண்டினாள்.

மஞ்சு? தன் வாழ்வு நிறைபெற வேண்டும் என்பது அக்காளின் விருப்பம்; அது சிறப்பாக நிறைவேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள் அந்தரங்கமாக.

கோயிலை விட்டு இவர்கள் வெளியே வந்த நேரத்தில் சொர்ணாம்பாளும் பட்டம்மாளும் வந்துகொண்டிருந்தார்கள்! நின்று சற்று வார்த்தையாடினார்கள். "ஏதோ ஓர் அர்ச்சனை என்று சாரதா பெயருக்கு ஆயிற்று. மனசே சரியாக இல்லை. அவள் பிறந்த நாளுக்கு என்று ஒரு பத்து ரூபாய் அனுப்பியிருந்தோம். அதைத் திருப்பியனுப்பிவிட்டாள். மஞ்சுவின் கல்யாணத்தைப்பற்றி நாங்கள் அசிரத்தை செய்கிறோம் என்று கோபம் அவளுக்கு. எதற்கும் எதற்கும் சம்பந்தம் பாருங்கள்!" என்று கமலம் தன் வேதனையை வெளியிட்டுக் கொண்டாள் எடுத்த எடுப்பிலே.

"ஐயோ, பாவம்! மனசு கஷ்டப்படத்தான்படும்" என்றார் சொர்ணம் அநுதாபத்துடனே.

"அந்தப் பெண் மனசும் நோகக்கொண்டுதான் இப்படிச் செய்திருக்கிறாள். அவளும் ஆறு மாதமாய் எப்படி அக்கறையாய்ச் சொல்லுகிறாள்! மஞ்சுவின் படிப்பும் முடிந்துவிட்டது. ஏன் அவசரப்படவில்லை என்று கேட்கிறாள்; நியாயந்தானே!" என்று பட்டம்மாள் பகர்ந்தார்.

மஞ்சு சங்கோசத்துடன் குழைந்து நின்றாள்.

"அவர்கள் இருப்பார்களோ வாசலில் இன்னமும்?" என்று நைப்பாசையுடன் வந்தாள் மஞ்சு. "எல்லாருக்கும் பிரசாதம்" என்று வழங்குவதற்குப் பழமும் செந்தூரமும் உதவும் என்ற நினைப்பு. வீடு வந்து பார்த்தால் ஏமாற்றம்.

"அப்பா எங்கே?" என்று கமலம் தேடினாள். "பட்டு மாமா வீட்டுக்குப் போயிருக்கிறார்!" என்றான் புதல்வன். எதற்கு? பட்டு மாமியின் கணவர் இங்கேயே வந்திருந்தாரே! அங்கு யாருடன் பேசப் போனார்? பெண்டுகளுடன் பேசுவதற்கா? அவர்கள் இன்னும் கோயிலிலிருந்து திரும்பியிருக்கமாட்டார்கள்.

"சரியாய்த்தான் சொல்லேன். என்ன சொல்லிவிட்டுப் போனார்? ரேடியோவை மூடு; நினைவு வரும்" என்று தாயார் சினந்த பிறகு அந்த மைந்தன் தெரிவித்தான்; "உன்னையும் வரச்சொல்லிச் சொன்னார் போலிருக்கிறது".

"அங்கேயா?"

"பின்னே எங்கே!"

"ஸிலோனுக்கு!" என்று மஞ்சு உல்லாசமாய்ச் சிரித்தாள். சபேசனும் கமலமும் வீடு திரும்ப ஒரு மணி நேரங்கூட ஆகவில்லை. அதற்குள் எத்தகைய மாறுதல் அவர்களிடத்தில்! தகித்த வெயில் எல்லாம் ஒடுங்கிச் செக்கர் வானம் காட்டும் காட்சியின் சோபைபோல் ஒரு பரபரப்பான பூரிப்பு; முகவிலாசம்.

"கல்யாணம் வருகிறதுடா பயலே!" என்று பிள்ளையின் முதுகில் தட்டிக் கொடுத்தார் சபேசன்.

"இன்னும் மேற்கொண்டு எல்லாம் நேருங்கூறுமாய் நடக்கட்டும்" என்றாள் கமலம், திருஷ்டி விழாமலிருக்க.

இந்தப் பெண்ணின் பொறுமையையும் சோதிக்க வேண்டாம் என்று, பிள்ளையிடம் சொல்லுகிற மாதிரி பெண்ணுக்கு விவரம் விளம்பினார்கள், பெற்றோர்.

"எல்லாம் கூடிவரும் விந்தை பார்!" என்று இறைவனின் திருவருளை வியந்த வண்ணம் சொன்னார்கள்.

சேகர் யார்? சாரதா குறிப்பிடும் 'மாப்பிள்ளை!' சேகரின் தந்தை அடிக்கடி வேலை விஷயமாக வெளியூர் போய்விடுவாராம். அவர் கையில் சபேசனின் கடிதம் கிடைத்ததாகவே தெரிய வரவில்லை. "பத்திரமாக இருக்கும்; போய்ப் பார்த்தால் தெரியும். நான் அங்கு இருந்திருந்தால் அப்பொழுதே அவரிடம் சேர்ந்திருப்பேன். ஊர்ப் பக்கம் இரண்டு மாதம் இருந்துவிட்டு இப்பொழுது சேகர் துணையுடன் போய்க் கொண்டிருக்கிறேன்" என்று கூறினாராம் ஸ்ரீமதி சொர்ணம். "அதற்கென்ன! ஜாதகப் பொருத்தம் நாங்களும் பார்க்கிறோம். போய்க் கவனிக்கிறேன். பிராப்தம் இருந்தால் நடந்துவிடும்; சந்தோஷந்தான்" என்று தைரியமூட்டிப் பேசினாராம் சொர்ணம். இன்னும் என்ன?

"ஏற்றம் தாழ்த்தி எல்லாம் அவரவர் மனசுபோல், கடவுளின் சித்தத்துக்குக் குறுக்கே நிற்குமா பணம்?" என்றுகூடக் குறிப்புக் காட்டிவிட்டாராம் சொர்ணம்; பின்னே என்ன?

தங்கந்தான் சொர்ணம் என்று முடிவாகிவிட்டது!

"எங்கள் வீட்டு வாசலில்தான் கோலத்துக்குச் செம்மண் கட்டியிருக்கும். வேறு அடையாளமே வேண்டாம். முன்னறிவிப்பில்லாமல் எப்பொழுதும் சௌகரியமாய் வந்துவிடலாம். போகிற வழிதானே? இறங்கிப் போக வேண்டும், வாருங்கள்" என்று பட்டம்மாள் அழைத்து இருந்தாராம். அதன்படி வந்தவர்கள்; செம்மண் அன்றைக்குத்தான் பூசியிருக்கிறாள் மஞ்சு, முதல்முதலாக!

"நான் செம்மண் தந்த முகூர்த்தம், மணைக்கோலம் போட வேண்டிய முகூர்த்தம் வருகிறது!" என்று பட்டம்மாள் பெருமைப்படுகிறாராம்; நியாயந்தானே!

"நீங்களும் மாமாவும் அவர்களை எங்களுக்குப் பரிசயம் பண்ணினதனால்தான்! மாமாவையும் விட்டுவிட முடியாது. அவர் அழைத்து வந்து, பேச்சு வளர்ந்த பிறகுதான் யார் என்று தெரிகிறது!" என்று சபேசன் மனமார்ந்த நன்றி கூறிவிட்டுத்தான் வந்திருக்கிறார்.

பட்டு மாமியின் தோழமையினால், பட்டம்மாளின் முரட்டு வார்த்தைகளில் பொதிந்திருக்கும் கருத்துக்களினால், அன்று பிற்பகல் சொர்ணாம்பாளும் தானுங்கூட வெளியிட்டுக் கொண்ட அபிப்பிராயங்களை, கமலம் சபேசனுக்கு விளக்கமாய் இயம்பினாள்.

"இனி என்ன சந்தேகம்? மேற்கொண்டு எல்லாம் ஜாம் ஜாமென்று நடந்துவிடும்!" என்றார் அவர்

"செந்தூரம் இந்தாருங்கள்; மறந்தே போனேன். அம்மன் கோயிலுக்குப் போன நல்ல வேளை" என்று கமலம் கொடுத்தபொழுது, அங்கே மறைவில் மஞ்சு ஒரு காரியம் செய்தாள். தயங்கி, மெல்ல, சிறு முயற்சியாக, ஒரு முறை, செம்மண் குழம்பிய நீர் வழிந்து கறைப்பட்ட அந்த இடத்தில் புடைவையைக் கண்களில் ஒத்திக்கொண்டாளோ? முத்தம் இட்டாளோ? முகத்தில் இதமாகத் துடைத்தாளோ?

"சாரதைக்குத் தந்தி அடிக்கட்டுமா? அவளுக்குப் பிறந்த நாள் பரிசாக இத்தனை நல்ல செய்தி. நிகழ்ச்சி, உருவாகியிருக்கிறதே! அவளுக்குத் தெரியாதே, பாவம்!" என்று மனைவியை வினவினார் சபேசன்.

"நள்ளிரவில் பயந்துவிடுவாள். தந்தி வேண்டாம். போன் பண்ணுங்களேன்!"

"அநாவசியமான செலவு செய்தோம் என்று அப்புறம் அவள் திட்டுவாள்!"

"ஆமாம், திட்டினாள்! சரி, இருக்கட்டும். போனும் வேண்டாம். ஓர் எவர்சில்வர் டவரா வருமே, ஒரு குங்குமச் சிமிழ் வருமே, மஞ்சுவுக்கு ஆகுமே, பணம் வீண் ஆயிற்றே என்று கேட்டாலும் கேட்பாள். பிழைத்துக் கிடந்து நாளைக்குச் சாவகாசமாய் எழுதிப் போடுவோம். அவளுக்கு விவரம் விளங்கும், திருப்தியாக இருக்கும். இத்தனை நாள் மனசு தவித்தவளுக்கு இரண்டு நாள் பிரமாதமில்லை" என்றாள் கமலம்.

கமலம் இப்படி நினைத்தாளே தவிர, அங்கே சாரதா இந்த இரண்டு நாளும் மிகவும் துன்பப்பட்டாள். 'நான் திருப்பியடித்த பணம் என் பிறந்த நாளன்றைக்கே போய்ச் சேர்ந்திருந்தால்? பாவம்! என்னவாகத்தான் இருக்கும்! என்று தாபம்.

'உறைக்கட்டும் என்றுதானே இருந்தேன்! ஹூம்; கண் கலங்கட்டும்' என்று கோபம்.

அவளுடைய தவிப்புக்கும் ஒரு வரம்பு ஏற்பட்டது. குங்குமம் தீட்டப்பெற்ற கடிதத்தில், பட்டு மாமி ஈந்த செம்மண் தீட்டிய சித்திரம் என்னும் பெருமை துலங்க நற்செய்தி வந்து சேர்ந்தது.

"உன் வேதனை, என் யோசனை எல்லாவற்றையும் ஏதோ பேச்சுவாக்கில் சொர்ணாம்பாள் மாமிக்குச் சொல்லி இருக்கிறேன்- மாமியை, யாரென்று அறியாமலே, அதனால் அவர்களுக்கு எங்கள் பொருளாதார நிலைமை தெரியும். நம்மைப்பற்றி எல்லா விவரமும் சொல்லக்கூடிய பட்டு மாமி இருக்கிறார். பொது நட்பு. எல்லாம் செவ்வனே நடக்கும் என்று நம்புகிறோம். கனிவு இருக்கிறது தங்கமான நெஞ்சிலே. புதுமை ஒளிவிடுகிறது, பொன்னான கருத்திலே. அந்த மாமி சொர்ணம், அப்படியே பசும்பொன்."

"எதுவும் உச்சியை அடைந்தால் பிறகு இறங்கத்தான் வேண்டும். உன் வருத்தம் அன்றைக்கு உச்சநிலையை அடைந்துவிட்டது என்பதை உணருகிறோம். நீ பணம்

அனுப்பிவிட்டதைக் கண்டு எங்களுக்கும் அப்படித்தான் இருந்தது. கடவுளருளால் மகிழ்ச்சிக்கரமான பேச்சுவார்த்தை எழுந்திருக்கிறது" என்று தாயும் தந்தையும் உருகி உருகி உவப்புடன் மனத்துக்கு உகந்த வண்ணம் எழுதினார்கள்.

"ஏன் மணியார்டரை அனுப்பச் சொன்னோம் என்று வேதனைப்பட்டுவிட்டேனாக்கும் அப்புறம். நீங்கள் அனுப்பாமல் இருக்கக் கூடாதா என்று கூடத் தோன்றிற்று!" என்று சொல்கிறாள் சாரதா, கணவனிடம்.

"எனக்கும் யோசனைதான். ஆனால் அன்றைக்கு உன்னுடைய உக்கிரம் இருந்ததே! சிவனே என்று அனுப்பிவிட்டேன் மரியாதையாக! நான் அனுப்பாமல் இருந்திருந்தால்?" என்று சிரித்து மழுப்பிக் குரலை நெடிது இழுத்தான் கணேசன்.

"அப்படியெல்லாம் தகிடுத்தத்தம் செய்கிற பேர் வழியாக நீங்கள் இருந்தால்... நான் ஏன் இப்படி இருக்கிறேன்?"

"எப்படி?"

"என் தங்கைக்குத் திருமணம் நடக்கவேண்டும் என்று நான் ஏன் தவிக்கிறேன்? எதற்கு ஆசைப்படுகிறேன்?"

இப்படி ஒரு கேள்வியாக விடையளிக்கத்தான் சாரதா விழைந்தாள். அவனும் ஊக்கமும் ஆவலுமாகக் காத்திருந்தான்.

பாழும் சங்கோசம் குறுக்கிட்டு இருவர் முகத்திலும் செம்மண் தீற்றிவிட்டது.

**********

(கலைமகள் டிசம்பர், 1955)